# இயேசுவை தினம் பார்க்கிறேன்

VOL 22 ISSUE 10 OCTOBER-2022 ஆண்டு சந்தா 100/- தனிப்பிரிதி 10/-



# நீ மண்ணாயிருக்கிறாய்


WWW.JESUSLIVES.IN

# ஆசிரியர் உரை

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த மாத இதழ் மூலமாக உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். சங் 22:5-ல் உம்மை நோக்கி கூப்பிட்டுத் தப்பினார்கள், உம்மை நம்பி வெட்கப்பட்டுப் போகாதிருந்தார்கள். இன்றைக்கு யாராக இருந்தாலும், யார் தேவனை நோக்கி கூப்பிடுகிறார்களோ, அவர்கள் வெட்கப்பட்டுப் போகாமலும், அவமானமடையாமலும் கர்த்தர் அவர்களை பாதுகாக்கிறார். கடந்த நாட்களில் நடைபெற்ற எல்லா உபவாச ஜெபங்களையும் தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். ஆகஸ்ட் 20-ஆம் தேதி நடைபெற்ற மதுரை எழுப்புதல் உபவாச ஜெபத்தில் திரளான ஜனங்களை கர்த்தர் கூட்டிச் சேர்த்தார். அண்ணன் மோகன் சி லாசரஸ் அவர்கள் ஜனங்களை ஜெபத்தில் நடத்தி, இந்த பட்டணத்திற்காக ஏன் ஜெபிக்க வேண்டும்? என்பதைக் குறித்து தேவ செய்தி அளித்து, ஜனங்களை தேவ வார்த்தையில் நடத்தினார்கள். தேவன் பலத்த காரியங்களைச் செய்தார். அதைத் தொடர்ந்து செப்டம்பர் 1,2,3-ஆகிய தேதிகளில் திருப்பத்தூர் உபவாச முகாமையும், இரண்டு வருஷங்களுக்கு பிறகு நடத்த தேவன் கிருபை செய்தார். ஜெபிக்கிற ஜனங்களை தேவன் கூட்டிச் சேர்த்து அளவில்லாமல் ஆசீர்வதித்தார். ஒவ்வொரு மாதமும் வானத்தின் வாசலிலும், மதுரையிலும் நடைபெறுகிற உபவாச ஜெபங்களுக்காக கருத்தாய் ஜெபியுங்கள். கர்த்தருக்குச் சித்தமானால் வருகிற அக்டோபர் மாதம் 22 முதல் 27 முடிய, 6 நாட்களுக்கு சுவிசேஷ பயிற்சி முகாம் செம்பட்டி வானத்தின் வாசல் எழுப்புதல் ஜெபமையத்தில் வைத்து நடைபெறுகிறது. இதிலே தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்கள் மாத்திரம் கலந்து கொண்டு பயிற்சி பெறுவார்கள். இயேசு வாழ்கிறார் மீடியா நிகழ்ச்சிகளுக்காகவும், இயேசுவை தினம் பார்க்கிறேன் பத்திரிக்கை ஊழியத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். வருகிற ஜனவரி மாதம் முதல் டிஜிட்டல் மூலமாக மாத இதழை நடத்த திட்டமிட்டிருக்கிறோம். பேப்பர் செலவு, பிரிண்ட் செலவு அதிகமாவதால், இனி விரும்பி கேட்கிற, சந்தா அனுப்புகிறவர்களுக்கு மாத்திரம் மாத இதழ் அனுப்பப்படும். தொடர்ந்து எங்களுக்காகவும், ஊழியத்திற்காகவும், பிரயாண பாதுகாப்பிற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். இயேசு கிறிஸ்துவின் மாறாத கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக

இயேசுவின் பணியில்,

(சகோ. L. வின்சென்ட்ராஜ்)





# நீ மண்ணாயிருக்கிறாய்

சகோ. L. வின்சென்ட்ராஜ்

ஆண்டவரும் உலக இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள். தேவனுடைய பெரிதான கிருபையினால் இந்த செய்தியின் மூலம் உங்களைச் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இன்றைக்கு நாம் வாழும் இந்த விஞ்ஞான உலகில் மனிதன் கொடி கட்டி பறக்கிறான். சந்திர மண்டலத்திற்கு போனேன், வான மண்டலத்திற்குப் போனேன் நான் செய்யாத காரியம் இல்லை, நாங்கள் கண்டுபிடிக்காத காரியம் இல்லை, அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்கிறார்கள். நாங்கள் பூமியின் எல்லையைக் காட்டிலும் உயர்ந்தவர்கள். நாங்கள் அசுர வேகத்தில் வளருகிறவர்கள். எங்களை மேற்கொள்ள ஒருவனும் இல்லை என்று தலைக்கு மேல் ஆணவத்தில் கொடிகட்டிப் பறக்கிற இந்த உலகத்தில், கடந்த சில வருஷங்களாக உலகம் முழுவதும் ஏற்பட்ட கொடிய கொள்ளை நோய் (கொரோனா) முழுஉலகத்தையும் மனிதனுடைய அறிவுக்கும், அகந்தைக்கும் ஒரு பெரிய முற்றுப் புள்ளியை வைத்தது. குதிரைக்கு மூக்கனாங் கயிறு போட்டது போல தேவன், மனிதனுடைய அறிவுக்கும் அகந்தைக்கும் மூக்கனாங்கயிறு போட்டு அறிவுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார். இன்றைக்கு இந்த செய்தியை வாசிக்கிற ஒவ்வொருவரும், மனிதன் எங்கிருந்து தோன்றினான், எங்கிருந்து வந்தான் என்பதை அறிந்து கொண்டால், சற்று ஆட்டம் பாட்டம் எல்லாம் குறைந்து தன்னைக் படைத்த, உண்டாக்கின தேவனுக்கு முன்பாக பயபக்தியாக இருப்பான் என்பதை நம்புகிறேன். தேவன் மனிதனைப் படைப்பதற்கு முன்பாக, சிருஷ்டிப்பதற்கு முன்பாக தூதர்கள் உலகமாயிருந்தது. அதிலே மூன்று முக்கியமான தூதர்கள் இருந்தார்கள். மிகாவேல், காபிரியேல், லூசிபர் என்று மூன்று பேர். லூசிபர் என்ற தூதனை, தன்னை ஆராதிக்கவும், தேவனை மகிமைப்படுத்தவும் தேவன் ஏற்படுத்தி வைத்திருந்தார். மற்ற இரண்டு தூதர்களும் தேவன் தங்களுக்கு கட்டளையிட்ட யாவற்றையும் சரியாய் செய்து கொண்டிருந்தார்கள். அதாவது தேவன் கொடுத்த வேலையை கவனமாய் நேர்த்தியாய் செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் லூசிபர் என்ற தூதன் மட்டும் அகந்தை, பெருமை அடைந்து தேவனுக்கு விரோதமாய் பெருமை கொண்டு தனக்கு என்று, தன்னைத் தொழ, ஆராதிக்க ஒரு கூட்டத்தை, தூதர்களை தன் பக்கமாய் திருப்பினான் என்று வேதம் சொல்லுகிறது. எசேக்கியேல் 28-ஆம் அதிகாரத்தில் 14 முதல் 17 வரை நீ, காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணுப்பட்ட கேரூப். தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய், நீ, சிருஷ்டிக்கப்பட்ட நாள்துவக்கி உன்னில் அநியாயம் கண்டு பிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய். உன் வியாபாரத்தின் மிகுதியினால், உன் கொடுமை அதிகரித்தது. நீ, பாவஞ் செய்தாய், ஆகையால் நான் உன்னைத் தேவனுடைய பர்வதத்திலிருந்து ஆகாதவனென்று தள்ளி, காப்பாற்றுகிற கேரூப்பாய் இருந்த உன்னை அக்கினிமயமான கற்களின் நடுவே இராதபடிக்கு அழித்துப் போடுவேன் என்றார். வான மண்டலத்தில் இருந்த அந்த கேரூப் தூதனை தேவன் பூமியின் மண்ணிலே தள்ளிவிட்டார். அது தேவனுடைய தண்டனை, சாபமாக இருந்தது.இயேசு சொன்னார் லூக்கா 10:18-ல் சாத்தான் மின்னலைப் போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன் என்றார். அவன் சபிக்கப்பட்டு கீழே விழுந்து அக்கினி கடலிலே, மண்ணிலே தள்ளப்பட்டான்.அந்த மண் அவன் நிமித்தம் சபிக்கப்பட்டிருந்தது.

2 பேதுரு 2:4-ல் பாவஞ்செய்த தூதர்களைத் தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படி லூசிபர் தூதன் பாவம் செய்து தள்ளப்பட்ட போது, அவன் இருந்த இடத்தில் அவன் காரியத்தை செய்ய, தேவனை துதிக்க, ஆராதிக்க அந்த வாய்ப்பை தேவன் மனிதர்களுக்குக் கொடுத்தார். ஏசாயா 43:21-ல் இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன், இவர்கள் என் துதியைச் சொல்லி வருவார்கள் என்றார். இப்படி துதிக்கவும், தேவனைக் கனம் பண்ணவும் களிமண்ணினாலே பிசைந்த மண்ணினாலே மனிதனை உண்டாக்கி, அப்படி பிசைந்த களிமண்ணிலே தம்முடைய காற்றை ஊதினார். உயிர் மூச்சை அவன் மேல் ஊதினார். அப்பொழுது மனிதன் உயிருள்ளவனாக மாறினான்.

ஆதி 2:7-சொல்லுகிறது தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். நாம் மண்ணிலிருந்து வந்தவர்கள், மண்ணுக்கே திரும்ப வேண்டும் என்பது தேவனுடைய நியமம். இந்த மண்ணான சரீரத்திலே தேவனுடைய சுவாசத்தை, உயிர் மூச்சை நாம் பெற்றிருக்கிறோம். அந்த மூச்சை, அந்த சுவாசத்தை தேவன் திரும்ப வாங்கிக் கொண்டால் அவைகள் மண்ணுக்கு திரும்பும்.

சங் 104:29-ல் நீர், உமது முகத்தை மறைக்க, திகைக்கும், நீர், அவைகளின் சுவாசத்தை வாங்கிக்கொள்ள, அவைகள் மாண்டு, மண்ணுக்குத் திரும்பும் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆகவே இந்த செய்தியை வாசித்துக் கொண்டிருக்கிற என் அன்பு சகோதர, சகோதரிகளே என்னதான் நாம் படித்திருந்தாலும், வசதி வாய்ப்புகள் இருந்தாலும், விஞ்ஞானத்தில் வாழ்ந்திருந்தாலும், கை நிறைய சம்பாதித்தாலும் வீண் பெருமையாய், அகந்தையாய் மற்றவர்களைப் பறக்கணித்து, அற்பமாய் தள்ளிவிட்டு,நான் மேலானவன் என்னைப் போல யார்? உண்டு என்று சொல்லாமல், நாம் மண்ணிலிருந்து வந்தவர்கள், மண்ணுக்கே போகிறவர்கள் என்பதை மறந்து போகாமல் தேவனுக்குப் பயந்து அவரை தொழுது, அவருடைய சாயலான மனிதர்களை நேசிக்கவும், மதிக்கவும், அன்பு செலுத்தவும், உதவி செய்யவும் வாழப் பழகிக் கொள்ளுவோம். சங் 103:14 சொல்லுகிறது நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவு கூருகிறார். நம்முடைய ஆட்டம், பாட்டம் எல்லாம் மனிதர்களிடத்தில் தான் எடுபடும். இவர் பெரியவர், உயர்ந்தவர், சிறந்தவர், சூப்பரானவர் என்று. ஆனால் தேவனிடத்தில் எடுபடாது. ஏனென்றால் அவர் நம்மை சிருஷ்டித்தவர். களிமண்ணினாலே பிசைந்தவர். அவருடைய சுவாசத்தை, உயிர் மூச்சை நமக்கு இரவலாக கொடுத்திருக்கிறார்.

நாம் மண்ணென்று அவர் நினைவு கூருகிறார். அவருக்கு முன்பாக நாம் அடக்க ஒடுக்கத்தோடு, அவரைப் பணிந்து, அவர் நம்மை பூமியில் ஏற்படுத்திய நோக்கத்தை உணர்ந்து, அறிந்து அவரை பயத்துடனே சேவிக்கக்கடவோம். இதை யோபு என்ற பக்தர் கண்டுபிடித்தார். யோபு 10:9-ல் களிமண்போல என்னை உருவாக்கினீர் என்பதையும், என்னைத் திரும்பத் தூளாகப் போகப் பண்ணுவீர் என்பதையும் நினைத்தருளும் என்று, தேவனுக்கு முன்பாக தன்னைத் தாழ்த்தி பணிந்து கொண்டு, அத்தனை பாடுகள், உபத்திரவங்களிலிருந்தும் வெளியே வந்தார்.

மட்டுமல்ல யோபு 28:2-ல் இரும்பு மண்ணிலிருந்து எடுக்கப்படுகிறது போல, செம்பு கற்களிலிருந்து உருக்கி எடுக்கப்படும். இந்த மண்ணுக்குள் தான் செம்பு இருக்கிறது, பொன் இருக்கிறது, விலையேறப் பெற்ற பொக்கிஷம் இருக்கிறது. பொட்டாசியம், இரும்பு, இன்னும் நிறைய தாதுப் பொருட்கள் எல்லாம் மண்ணிலிருந்து தான் வருகிறது. ஆகவே தான் இதை உணர்ந்து அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார்

2 கொரி 4:7-ல் இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் என்றார். நாம் மண்ணான சரீரத்தில் தேவனுடைய இரக்கத்தை, பாவ மன்னிப்பை பெற்றபடியால் விலையேறப்பெற்ற ஞானம், கிருபை, தேவனுடைய தயவு, இரக்கம், அபிஷேகம், ஊழியம் இவைகளைப் பெற்றிருக்கிறோம்.நீங்கள் உயர்ந்தவர்கள், படித்தவர்கள், பரிசுத்தவான்கள், பக்தியுள்ளவர்கள், சிறந்தவர்கள் என்பதற்காக அல்ல, இது உங்களால் உண்டானதும் அல்ல தேவனுடைய ஈவு, தயவு. ஆகவே இந்த மண்பாண்டங்களில் தேவனுடைய பொக்கிஷங்களை பெற்றிருக்கிறோம். 2 கொரி 3:5-ல் எங்களால் ஏதாகிலும் ஆகும் என்பது போல ஒன்றை யோசிக்கிறதற்கு, நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல, எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது என்றார். ஆகவே தான் தேவன் மனிதனைப் பார்த்து மனிதனே, நீ, மண்ணாக இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்

என்றார். போகட்டும் இந்த மண்ணிலிருந்து நாம் என்ன செய்வது?, எப்படி தேவனைப் பின்பற்றுவது?,. பரலோகத்திற்குப் போவது? இந்த மண்ணினால் என்ன நன்மை என்பதைப் பார்ப்போம்.

## நாம் விதைப்பதற்கு மண் தேவை

சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறை நிலத்தில் விழுந்தது. அதற்கு ஆழமான மண்ணில்லாததினாலே சீக்கிரத்தில் முளைத்தது. வெயில் ஏறினபோதோ, தீய்ந்து போய், வேரில்லாமையால் உலர்ந்துபோயிற்று. மாற்கு 4:5,6. தேவனாகிய கர்த்தர் களிமண்ணினாலே மனிதனை சிருஷ்டித்து,அவனை ஏதேன் தோட்டத்தில் வைத்தார். தன்னோடு இருக்கவும், தன்னுடைய ஜனம் களிப்பாய் இருக்கவும் சிங்காரத் தோட்டத்தில் வைத்திருந்தார். ஆனால் பிசாசு கோப வெறி கொண்டு தான் பூமியிலே தள்ளப்பட்டதையும், தன்னுடைய மேன்மையிலே மனிதன் இருப்பதையும் கண்ட அவன் எரிச்சலடைந்து, எப்படியாவது தேவனிடத்திலிருந்து மனிதனைப் பிரிக்க வேண்டும். அவர்கள் தேவனை விட்டுப் பிரிகிற, விலககிற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும் என்று பார்த்துக் கொண்டே இருந்தான். அதினாலே ஏவாளோடே பேசி இந்த பழத்தை புசிக்கும் நாளில் நீங்கள் தேவர்களைப் போல இருப்பீர்கள் என்று ஏமாற்றியது. ஆதி 3:5-ல் சொல்லப்பட்டபடி வஞ்சித்து, ஏமாற்றி தேவ கோபத்திற்குள்ளாக்கி விட்டான். அதன் விளைவாக அவர்கள் தேவனுடைய மகிமையை இழந்து, தேவனுடைய வல்லமை, அதிகாரத்தை இழந்து, தேவ சமூகத்திலிருந்து துரத்தப்பட்டார்கள். தேவனுக்கு அருகில் இருந்தவர்கள், இப்பொழுது தூரமானார்கள், தேவ சமூகத்தை இழந்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது.அப்பொழுது தான் ஆண்டவர் அவர்களுக்கு தண்டனை கொடுத்து, பிசாசைப் போல் பூமியில் தள்ளாமல் ஆதி 3:23-ல் நீ, எந்த மண்ணிலிருந்து எடுக்கப்பட்டாயே அதே, மண்ணுக்குத் திரும்பிப் போ, அது மட்டுமல்ல, அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்தவும், சீர்படுத்தவும், செப்பணிடவும் தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார். பிசாசைப் போல மனிதனை சபித்து, பாதாளத்திற்குள் தள்ளாமல் அந்த தோட்டத்தை பண்படுத்தவும், சரி செய்யவும், கொத்தி எருப்போடவும், தண்ணீர் பாய்ச்சவும், நீ போய் பரலோகத்திற்கு வர, பாடுபட்டு மரித்து, என் கிரியைகளை செய்து, அடிபட்டு திருந்தி, என்னுடைய பரலோக மேன்மையை தெரிந்து கொண்டு வா. அப்பொழுது என் அருமை, என் மேன்மை உனக்கு தெரியவும் இல்லை, புரியவும் இல்லை என்று ஏதேன் தோட்டத்திலிருந்து, தேவ சமூகத்திலிருந்து பூமிக்கு அனுப்பிவிட்டார். அதன் பிறகு தான் அந்த தோட்டத்தை, பரலோகத்தை, மேன்மையான இடத்தை சுடரெளி ஏந்திய கேருபீன்களை வைத்து பாதுகாத்தார். ஒருவரும் போக முடியாதபடி ஜீவ விருட்சத்திற்கு போகும் வழியை அடைத்தார். அந்த வழியைத் திறக்கவும், நாம் மீண்டும் தேவனோடு இணைக்கப்படவும் தான் இயேசு இந்த பூமிக்கு இறங்கி வந்து நானே வழி, பரலோகம் போக என்னையன்றி வேறு வழியில்லை. நானே சத்தியம், நானே ஜீவன் என்று சொல்லி நமக்காக சிலுவை பாடுகளை ஏற்றுக் கொண்டு கெத்சமனே தோட்டத்தில் பலத்த சத்தத்தோடு ஜெபித்தார். யோபு 16:18-ல் பூமியே, என் இரத்தத்தை மூடிப்போடாதே, என் அலறுதலுக்கு மறைவிடம் உண்டாகாதிருப்பதாக என்று கதறினார். அப்பொழுது அவருடைய வியர்வை இரத்தத் துளிகளாக பூமியிலே, மண்ணிலே விழுந்தது. லூக்கா 22:44-ல் அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார், அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது. அதுவரை பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும், அது உனக்கு முள்ளுகளையும், குருக்கையும் முளைப்பிக்கும் என்ற அந்த சாபத்தை மாற்றி, இனி விதைப்பும், அறுப்பும் ஒழிந்து போவதில்லை என்று நம்முடைய நிலத்தை, நம்முடைய கல்லான இருதயத்தை, நம்முடைய குடும்பத்தை பண்படுத்த ஆரம்பித்தார். இன்றைக்கு அவருடைய வித்து, கெத்சமனே தோட்டத்தில் அவர் சிந்திய பலன், அந்த மண்ணின் ஆசீர்வாதம், நம்மேல் இறங்கி இருக்கிறது. நம்முடைய உள்ளத்தை, தரிசு நிலத்தை, முட்பூண்டுகளை மாற்றி இருக்கிறது. எபிரே 6:7,8-ல் எப்படியெனில் தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முள்செடிகளையும், முள்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும், சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது. சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு என்று சொல்லப்பட்டுள்ளது. தரிசு நிலமாக, தண்ணீர் நிலமாக இருந்த மனிதனுடைய இருதயத்தை மண் உள்ளதாக, விதை விழுந்தால் முளைக்கிறதற்கான விளைச்சல் நிலமாக மாற்றினார். எரேமியா 4:3, ஓசியா 10:12-ல் நீங்கள் நீதிக்கென்று விதை

விதையுங்கள், தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள். கர்த்தர் வந்து உங்கள் மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது என்றார். இன்றைக்கு தரிசு நிலத்தை, முள்ளுள்ள இந்த பாறை இடத்தை, அவர் சிந்திய இரத்தத்தினால் மண் உள்ள, உரமுள்ள, ஆரோக்கியமுள்ள விளைச்சளைக் கொடுக்கவும், சில விதைகள் மண்ணில் விழுந்து, நல்ல நிலத்தில் விழுந்து, ஒன்று முப்பதும், அறுபதும், நூறு மடங்காகவும் பலன் கொடுத்தது போல தேவன் மாற்றுவார், இந்த தோட்டத்தைப் பண்படுத்தவும், பூமியிலே தங்களை சரிசெய்து கொண்டு மனம் திரும்பி, இரட்சிப்பை அடையவும், அதே மண்ணைப் பண்படுத்தவும், விளைச்சல் கொடுக்வும் தேவனுக்கு மகிமையாக வாழ்ந்து பரலோகம் போகவும் தேவன் இந்த பூமியிலே நம்மை அனுப்பினார்.

ஆகவே இந்த செய்தியை வாசிக்கின்ற என் அன்பு சகோதர, சகோதரிகளே மண்ணு தானே இனி எனக்கு என்ன இருக்கு என்று ஏனோ தானோ என்று வாழ்ந்து விடாமல், அவருக்கு மகிமையாக ஜீவிக்காமல், நீ, மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்ற வார்த்தையின்படி இந்த மண்ணிலே, இந்த பூமியிலே தேவனுக்காக பொன்னாக வாழ்ந்து, தங்கமாக வாழ்ந்து, விலையேறப்பெற்ற பாத்திரமாக, கனத்திற்குரிய பாத்திரமாக ஜீவித்து தேவன் பயன்படுத்திய, சரி செய்த மண்ணாக, பயன்படுத்தும் மண்ணாக மாறுங்கள். இதற்குத்தான் நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய் என்றார். நம்மை இந்த பூமியிலே விலையேறப்பெற்ற பாத்திரங்களாக மாற்றியிருக்கிறார். வேதம் சொல்லுகிறது 2 தீமோத் 2:20-ல் ஒரு பெரிய வீட்டிலே பொன்னும், வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும், மண்ணுமான பாத்திரங்களுமுண்டு, அவைகளில் சில கனத்திற்கும், சில கனவீனத்திற்குமானவைகள் என்றார். நாம் கனவீனமாய் போகாதபடிக்கு கனத்திற்குரிய எஜமானுக்கு உபயோகமான பாத்திரமாய் மாற வேண்டும். நம்மை தாழ்த்தி ஏசாயா 64:8 சொல்லுகிறது போல இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண். நீர் எங்களை உருவாக்குகிறவர் என்ற வார்த்தையின்படி இந்த களிமண்ணாகிய நம்மை அவருக்குப் பிரயோஜனமாக மாற்றி மகிமையடைவாராக. அதற்குத்தான் இந்த மண்ணை இந்த பூமியிலே உயிரோடே வைத்திருக்கிறார்.

## மண்ணினாலே பலிபீடம்

மண்ணினாலே பலிபீடத்தை எனக்கு உண்டாக்கி, அதின் மேல் உன் ஆடுகளையும், உன் மாடுகளையும் சர்வாங்க தகன பலியாகவும், சமாதான பலியாகவும் செலுத்துவாயாக. நான் என் நாமத்தைப் பிரஸ்தாப்படுத்தும் எந்த ஸ்தானத்திலும் உன்னிடத்தில் வந்து உன்னை ஆசீர்வதிப்பேன் என்றார். யாத் 20:24. இந்த மண்ணினாலே சிருஷ்டிக்கப்பட்ட, உண்டாக்கப்பட்ட இந்த மனிதன், தேவனுக்கு மண்ணினாலே ஒரு பலிபீடத்தை கட்ட வேண்டும். பொன்னினாலோ, தங்கத்தினாலோ, சில்வரினாலோ மரத்தினாலோ, சித்திர வேலையினாலோ கட்டாமல், கற்கள் பளிங்குகளினால் கட்டாமல் மண்ணினாலே அதாவது உடைகிறதாக, நொருங்குகிறதாக இருக்க வேண்டும் என்றார். அப்படி என்றால் நம்முடைய உடல் தான், சரீரம் தான் மண். இந்த மண்ணிலிருந்து, உடைத்து உருவாக்கப்பட்ட குணத்திலிருந்து, சுபாவத்திலிருந்து தேவனுக்கு ஒரு பலிபீடம் கட்ட வேண்டும். அது பணத்தினாலோ, பளிங்குனாலோ அல்ல நாம் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, இரட்சிக்கப்பட்டு அதினால் உண்டாகிற மாற்றம், சுபாவம், குணங்கள், தேவனுடைய கிரியைகளால் அவருக்கு பலிபீடம் கட்ட வேண்டும். அதை கட்டுகிறவர் தேவன். இதைத்தான் ரோமர் 9:21-ல், எரே 18:4,6 வசனத்தில் தேவன் சொல்லுகிறார். மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒன்றை கனவீனமான காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின் மேவ் அவருக்கு அதிகாரம் இல்லையோ? என்று தேவன் கேட்கிறார். நாம் மிதிக்கப்பட்ட களிமண்ணாக, தேவன் எது சொன்னாலும் செய்கிற சுபாவம் நிறைந்தவர்களாக வாழ்கிற, வனைகிற பாத்திரமாக, அவர் திருப்புகிற பக்கமெல்லாம் செல்லுகிற பாத்திரமாக இருக்க வேண்டும். இதற்காகத்தான் மண்ணினாலே ஒரு பலிபீடத்தை கட்டுங்கள் என்றார். இந்த மண்ணாகிய மனிதனுடைய இருதயத்திலிருந்து வருகிற துதி ஸ்தோத்திர ஜெபங்கள் தான் விலையேறப்பெற்ற பலிகள். இதைத்தான் சங் 51:17-ல் தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான், தேவனே, நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர் என்று தாவீது ராஜா இருதயம் நொறுங்கி,

உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு தேவனால் வனைக்கப்பட்டு, சமாதானப் பலிகளை, ஒப்புரவாகுதலின் பலிகளை, மன்னிப்பின் பலியை, இரக்கத்தின் பலியை செலுத்துகிறார். இந்த மண்ணான மனிதனுடைய ஆத்துமாவிலே தேவனுடைய சுபாவசத்தினலே உண்டாகிற பலி தான் உயிருள்ள பலி. தேவன் ஏற்றுக்கொள்ளும்படி பலி செலுத்தத்தான் நாம் பூமியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறோம்.

ஆகவே தான் அப்போஸ்தலனாகிய பவுல் ரோமர் 12:1-ல் சொல்லுகிறார் நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக் கொள்கிறேன் என்றார். நம்முடைய சரீரத்திலிருந்து, மண்ணிலிருந்து உண்டாகிற பலியே தேவனுக்கு ஏற்புடைய பலி. இதைத்தான் தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். வெறும் சிடி, டிவி-யில் பாடல்களைக் கேட்டால் போதாது. உன் வாயைத் திறந்து தேவனைத் துதிக்க, ஸ்தோத்தரிக்க வேண்டும். உள்ளத்தின் ஆழத்திலிருந்து வருகிற ஜெபமாக இருக்க வேண்டும். இன்றைக்கு இதை செய்ய முடியாமல், பலிபீடம் உடைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டு ஜனங்கள் தேவனை மறந்து, இருமனமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட தேசத்தையும், ஜனங்களையும் தேவன் பக்கம் திருப்பத்தான், எலியா என்ற தேவ மனிதன் வானத்திலிருந்து அக்கினி இறங்கி வரப்பண்ணினான். அக்கினியினாலே உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றார். வணங்கா கழுத்துள்ளவர்கள், முரட்டுத்தனமானவர்கள், தேவனை மறந்தவர்கள், பாகாலைப் பின்பற்றினவர்கள் எல்லாரையும் கூடி வரச்செய்து உடைந்த பலிபீடத்தை, மறந்த பலிபீடத்தை சரி பண்ணினான். 1 இராஜா 18:30-33 அப்பொழுது எலியா சகல ஜனங்களையும் நோக்கி என் கிட்டே வாருங்கள் என்றான். சகல ஜனங்களும் அவன் கிட்டே வந்தபோது தகர்க்கப்பட்ட கர்த்தருடைய பலிபீடத்தை அவன் செப்பனிட்டு, உனக்கு இஸ்ரவேல் என்னும் பெயர் இருப்பதாக என்று சொல்லி, கர்த்தருடைய வார்த்தையைப்பெற்ற யாக்கோபுடைய குமாரரால் உண்டான கோத்திரங்களுடைய இலக்கத்தின்படியே பன்னிரண்டு கற்களை எடுத்து, அந்தக் கற்களாலே கர்த்தருடைய நாமத்திற்கென்று ஒரு பலிபீடத்தைக் கட்டி, சுற்றிலும் தானியம் அளக்கிற இரண்டுபடி விதை விதைக்கத்தக்க இடமான ஒரு வாய்க்காலை உண்டாக்கினான். உடைந்த, இஸ்ரவேலர் நொருக்கிப் போட்ட, மறந்த பலிபீடத்தை சரி செய்து, மனம் திரும்பி பொல்லாத துர்குணத்தை விட்டு மக்களை தேவன் பக்கமாக திரும்பினான். இது தான் மண்ணினால் உண்டாக்கப்பட்ட பலிபீடம். இந்த பலிபீடம் சரி செய்யப்பட்ட போது தேவன் இறங்கி அக்கினியை அனுப்பி ஜனங்களின் மேல் சுடடெரிப்பின் ஆவியை ஊற்றினார். உடைந்த பலிபீடங்களை சரிசெய்து, சர்வாங்க தகன பலிகளையும், சமாதான பலிகளையும் செலுத்தி ஜனங்களை தேவனோடு இணைத்தான். மண்ணைப் பொன்னாக மாற்றினான். இந்த செய்தியை வாசிக்கிற என் அன்பு சகோதர, சகோதரிகளே இன்றைக்கு இந்த பூமியிலே உயிரோடிருக்கும் நாம் எல்லாம் கர்த்தரை நேசித்து அவரை பின்பற்றி அவருக்கு உகந்த பாத்திரமாக மாறி, திரும்ப அந்த மண்ணுக்குப் போவதற்குள் கர்த்தருக்காக என்ன என்ன செய்ய முடியுமோ அதை எல்லாம் செய்யுங்கள். அப்பொழுது தேவன் உங்கள் மேல் பிரியமாயிருப்பார். உங்கள் பலிகளை ஏற்றுக் கொள்வார். இந்த மண்ணுக்குள் ஒரு பொக்கிஷத்தை வைத்து உங்களையும், உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக. கிருபையானது உங்கள் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.


ஜெப உதவிக்கு
1800 309 9333

+91 944 28 00 447
+91 944 28 00 449

மின்னஞ்சல்
prayers@jesuslives.in

இணையதளம்
jesuslives.in

# கர்த்தாவே!
# உமக்கு ஒப்பானவர் யார்?



சகோதரி. கலா வின்சென்ட்ராஜ்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!. நம் ஆண்டவராகிய இயேசுவுக்கு நிகரானவர் இந்த பூமியில் இல்லை. எரே 10:6,7-ல் கர்த்தாவே! உமக்கு ஒப்பானவர் இல்லை, நீரே பெரியவர்!, உமது நாமமே வல்லமையில் பெரியது. ஜாதிகளின் ராஜாவே! உமக்குப் பயப்படாதிருப்பவன் யார்?. தேவரீருக்கே பயப்பட வேண்டியது. ஜாதிகளுடைய எல்லா ஞானிகளிலும், அவர்களுடைய எல்லா ராஜ்யத்திலும் உமக்கு ஒப்பானவர் இல்லை என்று எரேமியா சொல்லுகிறதை வாசிக்கிறோம். உமது நாமமே வல்லமையில் பெரியது. அவர் ஜாதிகளின் ராஜா, எல்லா ஜாதிகளின் ஞானிகளைக் காட்டிலும், ராஜ்யத்தைக் காட்டிலும் நீரே பெரியவர். உமக்கு ஒப்பானவர் ஒருவருமே இல்லை என்கிறார். இன்றைக்கு நாம் பூமியிலே எத்தனையோ பெரியவர்களை அறிந்திருக்கிறோம். அவர்களைப் பற்றி கேட்டிருக்கலாம், பேசியிருக்கலாம் ஆனால் அவர்களில் ஒருவரோடும். ஒப்பிட முடியாதவர் நம் இயேசு. அவர் ராஜா! சங் 89:6-ல் ஆகாய மண்டலத்தில் கர்த்தருக்கு நிகரானவர் யார்?, பலவான்களின் புத்திரரில் கர்த்தருக்கு ஒப்பானவர் யார்? ஆகாய மண்டலத்திலும், பலவான்களின் புத்திரரிலும் கர்த்தருக்கு நிகரானவரும், ஒப்பானவரும் இல்லை.

வானம் எனது சிங்காசனம், பூமி எனது பாதபடி என்று சொன்ன கர்த்தரை எதற்கு ஒப்பிட முடியும், ஏசாயா 40:18-ல் தேவனை யாருக்கு ஒப்பிடுவீர்கள்?. எந்தச் சாயலை அவருக்கு ஒப்பிடுவீர்கள்? என்கிறார். எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்த இஸ்ரவேலரை மோசேயைக் கொண்டு வெளியே கொண்டு வந்த தேவன் மோசேயைக் கொண்டு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். யாத் 20:4,5-ல் மேலே வானத்திலும் கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம் என்று கட்டளையிட்டார்.

ஆனால் யாத் 32:4-ல் ஆரோன் ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்தான். அப்பொழுது அவர்கள் இஸ்ரவேலரே, உங்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்றார்கள். எங்களை எகிப்திலிருந்து அழைத்துக் கொண்டு வந்த மோசேக்கு என்ன நேர்ந்ததோ, எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை உண்டு பண்ணும் என்று ஆரோனை ஜனங்கள் கேட்டபோது ஒரு கன்றுக்குட்டிக்கு தேவனை ஒப்பிட்டு, இது தான் உன்னை அழைத்து வந்த தெய்வம் என்று காண்பித்தான். ஏசாயா 46:5-ல் ஆண்டவர் யாருக்கு என்னைச் சாயலும், சமமுமாக்கி, யாருக்கு நான் ஒப்பாகும்படிக்கு என்னை ஒப்பிடுவீர்கள்? என்கிறார். நாம் கூட எது ஒன்றிலும் ஒப்பிட முடியாத தேவனை, அவரது வல்லமையை மட்டுப்படுத்தி ஏதோ ஒரு சாயலை கனப்படுத்தி வாழ்வோம் என்றால் ஆண்டவரின் கட்டளையை மீறுகிறவர்களாக இருப்போம். ஆரோன் கன்றுக்குட்டிக்கு தேவனை ஒப்பிட்டு துக்கப்படுத்தினான். நாமும் தேவனை, அவர் வல்லமையை எதிலாகிலும் ஒப்பிட்டு அவரை துக்கப்படுத்தாமல், ஒப்பிட முடியாத அவரை மகிமைப்படுத்தி கனம் பண்ணுவோம்

## கர்த்தாவே! உமக்கு ஒப்பானவர் இல்லை

சாலமோன் தேவாலயத்தை கட்டி முடித்ததும், கர்த்தருடைய பலிபீடத்திற்கு முன்னே இஸ்ரவேல் சபையாருக்கும் முன்பாக கைகளை விரித்து 2 நாளா 6:11-14-ல் இஸ்ரவேலின் சபையார் எல்லாருக்கும் எதிராக முழங்காற்படியிட்டு, தன் கைகளை வானத்திற்கு நேராக விரித்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே! வானத்திலும் பூமியிலும் உமக்கு ஒப்பான தேவனில்லை. தங்கள் முழுஇருதயத்தோடும் உமக்கு

முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும், கிருபையையும் காத்து வருகிறீர் என்று ஜெபித்தான். இதையே 1 ராஜா 8:23-லும் இதை வாசிக்கிறோம். கர்த்தாவே! மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை என்று ஜெபம் பண்ணி தேவனை மகிமைப்படுத்துகிறான். மோசேயை அழைத்து தேவன், பார்வோனிடத்தில் அனுப்பிய போது ஜனங்களை அவன் விட மறுத்து கொண்டிருக்கிறான். வாதைகள் ஒவ்வொன்றாக வருகிறது. அதில் ஒன்று தவளைகள் எங்கும் சூழ்ந்தது. பார்வோனின் மந்திரவாதிகளும் தவளைகளை வரப்பண்ணினார்கள். ஆனாலும் தவளைகளை போகப் பண்ணவில்லை. பார்வோன் மோசேயையும், ஆரோனையும் அழைப்பித்து இந்த தவளைகள் என்னையும், என் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி வேண்டிக் கொள்ளுங்கள் என்றான். தவளைகளைப் போகப்பண்ண மோசே ஒப்பில்லாத தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டியிருந்தது. யாத் 8:10-ல் எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை நீர் அறியும்படிக்கு உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது என்று சொல்லி கர்த்தரை நோக்கி கூப்பிட்டான். அப்படியே தவளைகள் செத்துப் போயிற்று. மோசேயின் கையினால் பலத்த அற்புதங்களை செய்து, ஆண்டவர் தன்னை மகிமைப்படுத்தி, வெளிப்படுத்தினர். அவருக்கு ஒப்பானவர் ஒருவருமே இல்லை.

## உமக்கு ஒப்பானவர் யார்?

அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்ட ஜனங்கள் சந்தோஷமாய் புறப்பட்டு வரும்போது செங்கடலை எதிர் கொண்டார்கள். எந்த பக்கமும் வழியில்லை, எகிப்தை விட்டு வெகுதூரம் பிரயாணம் பண்ணியாயிற்று, இனித் திரும்பிப் போகவும் முடியாது என்ன செய்ய போகிறோம் என்று திகைக்கும் போது பின்னால் பார்வோனின் சேனை துரத்தி வருகிறது. பட்டகாலிலே படும் என்பார்களே அதைப் போல துன்பத்தின் மேல் துன்பம் பெருகினது. கலைஞர் கருணாநிதி உயிரோடு இருக்கும் போது ஒரு சம்பவத்தைச் சொன்னார் அரசியல் வாழ்வில் ஏற்பட்ட சிரமங்கள் நடுவில், கடலில் நீந்திச் செல்கிறார்கள் இரண்டு பேர். அவரும், அவர் நண்பரும் போகின்றார்கள். முக்கால் பகுதி நீந்திச் சென்றதும் நண்பரால் நீந்த முடியவில்லை. தலைவா நாம் திரும்பி விடுவோம் என்றார். அதற்கு இவர் நாம் முக்கால் பகுதியை நீந்தி விட்டோம் நாம் இனி திரும்பி போனாலும் மரணம் தான்,முடிந்த மட்டும் நீந்து கரையைத் தொட்டு விடலாம் என்று கரை சேர்ந்ததாகச் சொல்லுவார்.

இப்பொழுது இஸ்ரவேலருக்கு திரும்ப போகவும் முடியாது, செங்கடலை நீந்தி எங்கு போவது, எப்படிப் போவது, எத்தனை பேர் போவது? ஆளுக்கு ஆள் ஒருபுறம் சிதற நேரிடும். பிள்ளைகள், கைக்குழந்தைகள், ஆடு மாடுகள், உடைமைகள், பெண்கள், முதியவர், உயிர் பிழைக்க முடியுமா? கோபத்தோடு மோசேயோடே எதிர்த்தார்கள். எகிப்திலே கல்லறை இல்லை என்ற எங்களை வனாந்திரத்திலே கொண்டு வந்து மடியச் செய்கிறாய்? என்றார்கள். மோசேக்கும் என்ன செய்வதென்று தெரியாவிட்டாலும், தன்னை அழைத்த, அனுப்பின தேவனை நோக்கி பார்த்தான் கர்த்தர் தைரியப்படுத்தினார். செய்ய வேண்டியதை சொன்னார். நீ என்னை நோக்கி ஏன் முறையிடுகிறாய்? ஜனங்களை புறப்பட்டுப போகச் சொல், உன் கையிலிருக்கிற கோலை நீட்டி சமுத்திரத்தை பிளந்து விடு, அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போவார்கள் என்ற அதிகாரத்தை கொடுத்தார். அதன்படி மோசே செய்த போது செங்கடல் இரண்டாய் பிளந்தது. வெட்டாந்தரையில் நடந்து செல்வது போல மக்கள் நடந்து சென்றதும், அதைப் போல பார்வோனின் சேனை செங்கடலை கடக்க முயன்ற போது, கடல் அவர்களை மூடிப்போட்டதைக் கண்ட முழுஇஸ்ரவேலரும் மோசேயையும், கர்த்தரையும் புகழ்ந்து பாடுகிறார்கள். யாத் 15:11-ல் கர்த்தாவே! தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவரும், துதிகளில் பயப்படத்தக்கவரும், அற்புதங்களைச் செய்கிறவருமாகிய உமக்கு ஒப்பானவர் யார்? என்று கர்த்தரை மகிமைப்படுத்துகிறார்கள். நம் தேவன் பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர், அவருடைய பரிசுத்தத்தில் அவரோடு யாரையும் ஒப்பிட முடியாது. அவரைப் போல அற்புதங்களைச் செய்ய ஒருவராலும் முடியாது. அவர் துதிகளில் பயப்படத்தக்கவர். அவருக்கு ஒப்பானவர் இல்லை. உங்கள் வாழ்விலும், என் வாழ்விலும் என்ன செய்யப் போகிறேன் என்று திகைக்கிற நிலை இருக்கிறதா? எப்பக்கமும் நெருக்கப்படுகிறீர்களா? உங்களுக்கு ஒரு அற்புதத்தைச் செய்ய இயேசுவால் முடியும். செங்கடல் போன்ற தடைகளை தகர்த்து, இந்த துன்பத்திலிருந்து கரை சேர்க்கும் தேவன் இயேசு உயிரோடு இருக்கிறார். நீங்களும் கர்த்தாவே உமக்கு ஒப்பானவர் இல்லை என்று சொல்லும் அதிசயங்களைக் காணச் செய்வார். அதுமட்டுமல்ல மீகா 7:18-ல் தமது சுதந்திரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தைப் பொறுத்து மீறுதலை மன்னிக்கிற தேவரீருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வையார் என்று தீர்க்கதரிசி சொல்லுகிறார். தமது ஜனங்களின் அக்கிரமத்தைப் பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவனாகிய

கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை. யார் ஒருவர் தம் பாவங்களுக்காக மனம் வருந்தி, இயேசுவே, என் அக்கிரமங்களைப் பொறுத்து, மீறுதலை மன்னியும், என் உள்ளத்தில் வாரும், என்னை ஏற்றுக்கொள்ளும் என்று சொல்லுகிறோமோ அவர்கள் ஒவ்வொருவர் பாவத்தையும், மீறுதலையும் இயேசு சிலுவையின் மீது தமது சரீரத்தில் சுமந்தார். அதனால் பூமியிலே பாவங்களை மன்னிக்க அவருக்கு அதிகாரம் உண்டு. மீறுதலை மன்னிக்கிற அவருக்கு ஒப்பானவர் ஒருவரும் இல்லை.

## உன்னதருக்கு ஒப்பாவேன்

இந்த வார்த்தை யார் சொன்னது? அதிகாலை மகனாகிய விடிவெள்ளியே என்று தன்னோடு செல்லமாய் வைத்திருந்த தூதர்களில் ஒருவன் லூசிபர். அவன் தான் இந்த வார்த்தையை தன் இருதயத்தில் சொன்னான். ஏசாயா 14:12-15 வரை வாசித்தால் நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன். வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும், நீ உன் இருதயத்தில் சொன்னாயே, ஆனாலும் நீ, அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய் என்று லூசிபரைப் பார்த்துச் சொன்னார். மகன் தான் ஆனால் அவன் உன்னதமானவருக்கு ஒப்பாக முடியாது. அவன் தன் இருதயத்தில் சொன்னபோது அவன் கீழே தள்ளப்பட்டான். இன்றைக்கு நாம் கூட உன்னதமானவருடைய சாயலுக்கு ஒப்பாக மாறலாமே தவிர, நாம் உன்னதமானவராக முடியாது.

தேவனுக்கு சேர வேண்டிய கனத்தை, மகிமையை தனக்கு திருடிக் கொண்ட லூசிபர் கீழே விழுந்து, அநேகரை பெருமையில், அகந்தையில் நிரப்பி உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்று கீழே நட்சத்திரங்களை தள்ளிக் கொண்டிருக்கிறான். மிகவும் ஜாக்கிரதையாய் ஓடி மகிமையை கர்த்தர் ஒருவருக்கே செலுத்தி பாதுகாக்கப்படுவோம். ஏரோது பிரசங்கிக்கும் போது ஜனங்கள் இது மனுஷ சத்தமல்ல, தேவ சத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையை செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழுபுழுத்து இறந்தான் அப் 12:22,23-ல் வாசிக்கிறோம். தேவனுக்குரிய மகிமையை தேவனுக்குச் செலுத்தி உன்னதமானவரை போற்றித் துதிப்போம்.

## இஸ்ரவேலே..... உமக்கு ஒப்பானவர் யார்?

ஆண்டவர் நம்மைப் பார்த்து சொல்லுவது வேறு, நாமே நம்மைப் பார்த்து சொல்லிக் கொள்வது வேறு. உபா 33:29-ல் இஸ்ரவேலே, நீ பாக்கியவான், கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே, உனக்கு ஒப்பானவன் யார்? உனக்குச் சகாயஞ்செய்யும் கேடகமும் உனக்கு மகிமை பொருந்திய பட்டயமும் அவரே, உன் சத்துருக்கள் உனக்கு இச்சகம் பேசி அடங்குவார்கள். அவர்கள் மேடுகளை மிதிப்பாய் என்று மோசே சொல்லுகிறதை பார்க்கிறோம். கர்த்தரால் இரட்சிக்கப்பட்ட ஜனமே உனக்கு ஒப்பானவர் யார்?. இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்கள், தன் பாவங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் மரித்து, இரத்தம் சிந்தினார் என்று விசுவாசிக்க வேண்டும், நான் இதை நம்பி ஏற்றால் அவரால் இரட்சிக்கப்படுகிறேன் என்கிற ஒவ்வொருவருக்கும் ஒப்பானவர் இல்லை.

கோடி கோடியாய் பணம் இருக்கலாம், ஆட்கள் பலம் பெரிதாய் இருக்கலாம், பெரிய மனிதர்களை தெரிந்து வைத்திருப்பதால் அல்ல, கர்த்தரால் இரட்சிக்கப்பட்டு, அவரை நமக்குள் வைத்திருப்பதே நம்மை ஒப்பிட முடியாதவர் என்ற பெயரைப் பெற்றுத் தருகிறது. ஒரே நாளில் பெற்ற இரட்சிப்பு அல்ல, அனுதினமும், முடிவுபரியந்தமும் இரட்சிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறோம். நமது இரட்சிப்பை பாதிக்கும் பல காரியங்களை தினமும் நாம் சந்திக்கிறோம். அந்த பாதிப்பை மேற்கொண்டு, தினமும் நாம் ஜெயிக்கும் போது நாம் இரட்சிக்கப்படுகிறோம். மீட்பை இயேசுவால், அவருடைய வார்த்தை நம்மோடு இடைபடுவதால், பரிசுத்த ஆவியானவர் தரும் பெலத்தால் அந்த தீமையை ஜெயித்து வெற்றி பெறுகிறோம். மத் 7:24-26-ல் ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின் மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன் என்றும், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின் மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடுவோன் என்றும் ஆண்டவர் சொன்னார். கன்மலையின் மேல் கட்டினவனை புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிட்டும், மணலின் மேல் கட்டினவனை புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிட்டும் ஆண்டவர் சொல்லி, அவர்கள் வாழ்வு எப்படி இருக்கும் என்று சொல்லுகிறார். நமக்கு ஒப்பானவர் ஒருவருமே இல்லை. ஆனால் கன்மலையின் மேல் வீட்டைக் கட்டினவர்களாய்,, எத்தனை பெரு வெள்ளம் மோதி அடித்தும் கீழே விழாமல் நிற்கிறவர்களாய், தேவன் எப்பொழுதும் நம்மை காத்துக் கொள்ள ஜெபிக்க வேண்டும். கர்த்தருக்கு ஒப்பானவர் ஒருவரும் இல்லை. அவரால் இரட்சிக்கப்பட்ட நமக்கு ஒப்பானவர் ஒருவருமில்லை. நாம் லூசிபரைப் போல உன்னதமானவருக்கு ஒப்பாக்கி, வேறு சாயலுக்கு ஒப்பாக்கி பாதிக்கப்படாதபடி ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் காப்பாராக!. இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டு ஒப்பில்லாத உயர்வை பெறுவார்களாக!

# 68வது திருப்பத்தூர் பரிசுத்த உபவாச முகாம்

கடந்த செப்டம்பர் மாதம் 1,2,3-ஆகிய தேதிகளில் திருப்பத்தூரில் வைத்து நடைபெற்ற பரிசுத்த உபவாச முகாமை தேவன் அளவில்லாமல் ஆசீர்வதித்தார். தேசத்தின் பல பகுதிகளில் இருந்து திரளான ஜெப வீரர்களை தேவன் கூட்டிச் சேர்த்தார். தேசத்தின் எழுப்புதலுக்காகவும், அழிந்து கொண்டிருக்கிற ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காகவும், தேசத்தை மூடியிருக்கிற இருளை தேவன் அகற்றி சுவிசேஷ ஒளியை பரவச்செய்ய ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பங்களை தேவன் கேட்டு நம் தேசத்தில் ஆசீர்வாதத்தையும் எழுப்புதலையும் கட்டளையிடப்போகிறார். மேலும் தேவ ஊழியர்களை அக்கினியாய் எடுத்துப் பயன்படுத்தினார். தேவன் அவர்கள் மூலம் கொடுத்த தேவவார்த்தையின் மூலம் ஜெபத்திற்கு வந்த ஜெபவீரர்களும் ஆவியில் பெலப்பட்டு இன்னும் அதிகமாக தேசத்திற்காக திறப்பிலே நிற்கச் செய்திருக்கிறார். யூடியூப் மூலம் உபவாச ஜெபத்தில் கலந்து கொண்டவர்களுக்குள்ளும் தேவன் பெரிய காரியங்களைச் செய்திருக்கிறார். அவருக்கேகோடான கோடி ஸ்தோத்திரம்.



வாலிபர் பகுதி



# உடனே அதை
# விரட்ட யோசியுங்கள்

சகோதரி. பிரேமா டேவிட்

நீங்கள் நியாப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்பட்டிருக்கிறபடியால் உங்களை மேற்கொள்ளமாட்டாது. ரோமர் 6:13.

கிறிஸ்துவில் அன்பான வாலிபதம்பி, தங்கைகளே, பாவத்தைப் போக்கும் பலியாக சிலுவையில் நமக்காக பலியான இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். குளிர் தாங்க முடியாத ஓர் இரவில் ஒட்டகத்தில் சென்ற ஒரு அராபியன், தன் கூடாரத்தில் தூங்கிக் கொண்டிருந்தான். கூடாரத்திற்கு அருகேயே ஒட்டகத்தையும் நிறுத்தியிருந்தான். நள்ளிரவில் திடீரென்று சப்தம் கேட்டு கண் விழித்த அவன் ஒட்டகம் தன் மூக்கை கூடாரத்தின் வாயில் திரைக்குள்ளே நுழைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான். உடனே அதை விரட்ட யோசித்தான்.

ஆனாலும் ஒட்டகத்தின் ஒரு சிறிய பாகம் மட்டும் கூடாரத்திற்குள் நுழைந்திருந்ததால் பரவாயில்லை என்று விட்டு விட்டான். சற்று பின்னர் கண் விழித்துப் பார்த்த போது ஒட்டகம் தன் தலையையும், கழுத்தையும் கூட வைத்திருப்பதைக் கண்டான். எழுந்து அவன் அதை விரட்டும் போது ஒட்டகம் அவனிடம், என்னிடம் கோபப்படாதீங்க வெளியே குளிர் தாங்க முடியவில்லை, இதற்கு மேல் நான் உள்ளே வர மாட்டேன் என்றது. திரும்பவும் அவன் தூங்கி விட்டு மூன்றாம் தரம் விழித்துப் பார்த்த போது ஒட்டகத்தின் முன்னங்காலும், முதுகும் உள்ளே இருக்கிறதைக் கண்டான். எழுந்து அதை வெளியே விரட்டும்படி முயற்சிக்கையில் ஒட்டகம் ஐயா, இனி மேல் ஒரு அங்குலம் கூட உள்ளே வர மாட்டேன் என்று சத்தியம் பண்ணுகிறேன், மேலும் நாம் இருவராக இருப்பதினால் உமக்கு சற்று அனலாயிருக்கும் என்றதாம். அராபியனுக்கு நல்ல தூக்கம் கொஞ்சம் மனபயம், ஆனால் ரொம்பவே சோம்பல் மீண்டும் தூங்கிவிட்டான். கொஞ்ச நேரத்தில் ஐயோ என்று அலறினான். அந்த ஒட்டகம் அவன் மேலே படுத்து விட்டது. அப்பொழுது ஒட்டகம் உமக்கு இடம் வேண்டுமானால் வெளியே போய் விடும் அங்கு போதுமான இடம் இருக்கிறது என்றதாம்.

இந்த கதையில் வரும் ஒட்டகம் போல், உங்கள் சிந்தனை, உணர்ச்சியில் வரும் அது, அதுதான் அந்த பாவத்துக்கு கொஞ்சம் இடம் கொடுத்து, கொடுத்து இன்று அதினின்று எழுந்திருக்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறீர்களா? நீதிமான் எத்தனை முறை விழுந்தாலும் எழுந்திருப்பான் என்றோ அல்லது பாவத்தை செஞ்சிட்டு மன்னிப்பு கேட்டுக்கலாம் என்றோ, அந்த தப்பை செய்யுற அவங்க நல்லாத்தானே இருக்காங்க. நான் இதை கொஞ்சம் செஞ்சா ஒன்னுமில்லை என்று உங்கள் மனதை சமாதானப்படுத்திக் கொண்டிருக்கிறீர்களா? அல்லது இயேசு உன் பாவத்தை மன்னிக்கவே மாட்டார். இதை நீ விடுவதற்கு, நீ எடுக்கும் முயற்சியெல்லாம் வேஸ்ட், நீ இருக்கிறதே வேஸ்ட் என்ற சுயபரிதாபத்திலே, சோர்விலிருக்கிறீர்களா? நீங்கள் அதிலிருந்து விடுதலை பெற செய்ய வேண்டியது என்ன? என்பதைப் பார்ப்போம்.

## இயேசுவைப் போல ஜெபியுங்கள்

முழங்காற்படியிட்டு பிதாவே, உமக்குச் சித்தமானால், இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும், ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம் பண்ணினார். செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமலிருப்பதும், செய்யக்கூடாததை செய்வதும் பாவமாகும். மோசேயின் செய், செய்யாதே, பத்துக்கட்டளைகளை மீறினது பாவமாக இருந்த காலங்களில் பாவத்திலிருந்து விடுபட அவர்கள் செலுத்திய பலி, செய்த முயற்சி நிரந்தர விடுதலையைத் தர முடியவில்லை. தற்காலிகமான விடுதலையை

பெற்று மீண்டும், மீண்டும் பாவம் செய்தனர். பவுலைப் போல விரும்புகிற நன்மையை, நல்லதை செய்யாமல் தீமையையே செய்து கொண்டிருந்தனர். என் விருப்பமல்ல, உங்கள் விருப்பம், சித்தம் என் வாழ்க்கையில் நடக்கட்டும் சிலுவை மரணம் மூலம் தான் மக்களுக்கு பாவத்திலிருந்து விடுதலை கிடைக்கும் என்றால், என்னால் முடியலை, பிடிக்கவில்லைன்னாலும் உங்கள் சித்தத்தைச் செய்ய வருகிறேன். என் சித்தமல்ல, உங்க சித்தம் நடக்கட்டும் என்று ஜெபித்த இயேசுவைப் போல முதலாவது ஜெபியுங்கள், சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று என்னை இரட்சித்துக் கொள்ளும். மத் 6:13. நிச்சயமாக பாவ எண்ணங்கள், செயல்கள், அதன் தண்டனைகள், விளைவுகளிலிருந்து உங்களை விடுதலையாக்கும். ( எபி 10:7, ரோமர் 8:1 ) பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவசித்தம். 1 பேதுரு 4:5. அந்த சித்தத்தின்படி நீங்கள் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள். எபி 7:10. கிருபையாகிய கிறிஸ்துவுக்கு கீழ் வந்த உங்களை பாவம் அடிமையாக்காது, நீங்கள் அதை ஜெயிப்பீர்கள். உடனே அதை விரட்ட இயேசுவைப் போல (தொடர்ந்து) ஜெபியுங்கள்.

## இயேசுவைப் போல எதிர்த்து நில்லுங்கள்

தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான். யாக் 4:7. பறவை தலைக்கு மேல் பறக்கலாம் ஆனால் உங்க தலை மேல் கூடு கட்ட விடாதீங்க என்று பெரியோர் சொல்லுவதைப் போல என் வாழ்க்கையில், என் குடும்பத்தில் பாவத்தை அனுமதிக்கவே மாட்டேன். இயேசுவின் நாமத்தில் பாவத்தை, இந்த காலத்தில் இதெல்லாம் தப்பில்லை.....என்று ஏற்றுக்கொள்ள மாட்டேன் தப்பு தப்புதான் என்று இயேசுவின் நாமத்தில் பாவத்தை எதிர்க்கிறேன் என்று சொல்லுங்கள். சாத்தானும், அவன் போடும் தீய எண்ணங்களும் உங்களை விட்டு மட்டுமல்ல உங்கள் எல்லையிலிருந்தும் ஓடிவிடும். இயேசுவை வனாந்திரத்திலே சாத்தான் சோதித்த போது பாசியாயிருந்த நேரத்தில் பசிக்கும், உணர்ச்சிக்கும் அவர் இடம் கொடுக்கவில்லை, பெருமைக்கும் பொருளாசைக்கும் அவர் இடம் கொடுக்கவேயில்லை. சாத்தான் வேதத்தின் வார்த்தையைக் கொண்டு, நீர் தேவனுடைய குமாரன் தானே என்று சொல்லியே அவரை சோதித்தான், அவன் தந்திரங்களை அறிந்த ஆண்டவர் தேவனுடைய குமாரனாகிய தனக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை பாவஞ்செய்வதற்கு துர்ப்பிரயோகம் செய்யாமல், பயன்படுத்தாமல் வார்த்தையைக் கொண்டு அவனை தோற்கடித்தார். அப்பாலே போ சாத்தானே என்று அவனைக் கடிந்து கொண்ட போது அவன் ஓடியே போனான். அவனை சிலுவையிலே முற்றிலுமாக ஜெயித்து, நமக்கும் பாவத்தின் மேல் ஜெயங்கொடுத்திருக்கிறார். இயேசப்பா என் பாவத்திற்காக மரித்தவரே, என் பாவங்களை மன்னியும், எனக்காக உயிர்த்தெழுந்தவரே, இனி பாவம் என்னை ஆளக்கூடாது, நீரே என் ஆண்டவர் என்று இருதயத்தில் நம்பி உம்மிடம் சொல்கிறேன் என்று உண்மையாய் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். அவர் உங்களை இரட்சிக்க, காப்பாற்ற, உங்களுக்கு உதவி செய்ய இருக்கிறார். அவர் உங்களை நேசிக்கிறார். இனியும் நீங்கள் சோதனைகளில் சிக்கி தவிக்க வேண்டாம். பாவத்தோடு விளையாடாமல் எச்சரிக்கையாயிருந்து பாவத்தை எதிர்த்து நில்லுங்கள். பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. உங்கள் பேரில் இருந்த எல்லா கெட்ட பெயர்கள் மறைய உங்களுக்குள்ளிருந்த தீய சுபாவங்கள் வெளியேற, தொடர்ந்து வேதவாசிப்பு, ஜெபம் அவசியம் இவற்றை விட்டுவிடாதிருங்கள். பரிசுத்தர் இயேசு பாவத்தை மேற்கொள்ளும் பெலன் தந்து வழிநடத்துவாராக.



## முக்கிய அறிவிப்பு !

இயேசுவை தினம் பார்க்கிறேன் மாதப் பத்திரிகைக் கடந்த 25 வருடத்திற்கு மேலாக அச்சடிக்கப்பட்டு வெளிவந்தது.இப்பொழுது பத்திரிக்கை அச்சடிக்கப்படுவதற்க்கு மட்டும் மாதம்தோறும் ரூ 50,000-க்கு மேல் செலவு செய்யப்படுகிறது.இதனால்,வருகிற மாதம் முதல் பத்திரிக்கை அச்சடிப்பைக் குறைத்து **Digital** முறையில் நம்முடைய இணையதளம் **www.jesuslives.in/resoruces** மற்றும் அனைத்து இயேசு வாழ்கிறார் சமூக வலைத்தளங்களில் வெளிவரும் அதில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். உங்கள் வாட்சப்பில் மாதந்தோறும் பெற 9442800449 என்ற எண்ணிற்கு **"Send Magazine"** என **Type** செய்து அனுப்பினால் மாதந்தோறும் உங்களுக்கு பத்திரிக்கை அனுப்பப்படும்.

சிறுவர் பகுதி



# வாத்து அது நேத்து



**ஹலோ குட்டீஸ் நல்லாயிருக்கீங்களா?**


ஜான் தம்பியும், ராணி அக்காவும் கால்பரீட்சை Leave-க்கு பாட்டி வீட்டுக்குப் போகலாம்னு அம்மா சொன்னவுடனே சந்தோஷமா இருந்தாங்க ஏன்னா, அங்கே நிறைய வாத்து வளர்க்கிறாங்க அவுங்க பாட்டி. ஜானும், ராணியும் பாட்டி வீட்டுக்குப் போனாங்க, பாட்டியோட சேர்ந்து வாத்துக்கு இரை போடுவாங்க, அது தத்தி, தத்தி ஓடுவதைப் பார்த்து ரொம்ப சந்தோஷமாயிருந்தாங்க. ஒரு நாள் சாயங்காலம் பாட்டி பக்கத்திலிருக்கிற பாட்டி வீட்டுக்குப் போயிட்டாங்க, வாத்தை கையில பிடித்துத் தூக்கனும்னு ஆசையாயிருந்த ஜான், அந்த சின்ன குட்டி வாத்தை தூக்கி வைச்சு விளையாடிக் கிட்டு இருந்தான். அப்ப அந்த குட்டி வாத்து அவன் கையிலே விழுந்ததினாலே அதற்கு அடிபட்டிருச்சு, என்ன செய்வதுன்னு தெரியாம பயந்து போய் ஒரு ஓரமாய் அந்த வாத்தை வைச்சதைப் பார்த்த ராணி அக்கா, டேய் ஜான் என்ன பண்ணியிருக்க பாட்டி கிட்ட சொல்லவா என்றாள் அக்கா, அக்கா சொல்லாதே என்றான், சரி அப்ப என்னோட வந்து வெங்காயம் உரிச்சு வை என்றாள். அவனும் சரிக்கா என்றான். சரி அடுத்து பாட்டி வர்றதுக்குள்ள பாத்திரம் கழுவனும் அதையும் கழுவிறு நான் கொஞ்ச நேரம் டிவி பார்த்துட்டுவர்றேன் என்றதும் அக்கா, நீ மட்டும் டிவி பார்க்கனும் நான் மாத்திரம் பாத்திரம் கழுவனுமா? என்று ஜான் கேட்டான். நீ கழுவலைன்னா பாட்டிக்கிட்ட சொல்லிருவேன்னு பயமுறுத்தினாள். நைட் ஆயிருச்சு சாப்பிடும் போதும் இதே மாதிரி ராணி அக்கா ஜானை பயமுறுத்திக் கொண்டே இருந்தாள். காலையில் எழுந்ததும் ராணியை கேட்டைத் திறக்கச் சொன்னாங்க பாட்டி, ராணி படுத்துக்கிட்டு ஜானைப் போய் கேட்டை திறக்கச் சொன்னாள். டேய் நேத்து வாத்து என்றதும் ஓடிப்போய் கதவைத் திறந்தான். அடுத்து வாத்து இருக்குமிடத்தை க்ளீன் பண்ண ராணியை பாட்டி கூப்பிட்ட போது, அவள் ஜானைக் கூப்பிட்டு நீ போ என்றாள், ஜான் போக மாட்டேன் நீ போ என்றான். உடனே நேத்து வாத்து என்றதும் ஓடினான். அக்கா நேத்து வாத்துன்னு சொல்லியே என்னைப் பயமுறுத்துறாளே பாட்டிட்ட நம்மலே சொல்லிட்டு மன்னிப்பும் கேட்க வேண்டியது தான் என்று தன் மனசுக்குள்ளே சொல்லிக் கொண்டு, பாட்டிட்ட எல்லாவற்றையும் சொல்லி மன்னிப்பு கேட்டான். ஓ ...... இந்தக் கதைதான் இங்க நடந்துச்சா சரி சரி தெரியாம தவறு செஞ்சுட்டா மன்னிப்பு கேளு. அப்ப மனசும் நிம்மதியா இருக்கும், அடுத்தும் தவறு செய்யாம உன்னை கவனமாய் பாத்துக்குவ. ஆனா செஞ்ச தப்பை மறைச்சு வைச்சா நிம்மதியும் இருக்காது, எப்பப்பார்த்தாலும் பயந்துக்கிட்டே இருக்கனும், ஒரு தப்பை மறைக்க, இன்னொரு தப்பை செஞ்சிருவ, இனி நல்ல பிள்ளையா இருக்கனும்னு சொன்னார்கள் பாட்டி. உடனே பாட்டி ராணியைக் கூப்பிட்டு இந்த இடத்தை கூட்டுமா என்றார்கள். அவள் ஜானைப் பார்த்து நீ கூட்டு என்றாள். அவனும் நீ கூட்டு என்றான். உடனே அவள் நேத்து....வாத்து என்றதும் பாட்டி சொன்னாங்க வாத்து அது நேத்து, சின்ன பையனை நீ இப்படி பயமுறுத்தலாமா? நீ பெரிய பிள்ளைதானே, என்னட்ட சொல்லியிருக்கலாமே?, பாட்டி, நீங்க திட்டுவீங்கன்னு நெனச்சேன், சாரி பாட்டி என்றாள். ராணி, நேத்து சாயங்காலமே அடிபட்ட வாத்துக்கு மருந்து போட்டுட்டேன். இப்ப அது நல்லாயிருக்கு. வாங்க போய் பார்க்கலாம் என்றார்கள் பாட்டி. இந்த மாதிரி நீங்களும் தப்புக்களை எல்லாம், அப்பா அம்மாவிடம் சொல்லி மன்னிப்பு கேட்டீங்கன்னா, அவுங்க மன்னிப்பாங்க, நம் இயேசு அப்பாவும் மன்னிப்பாங்க பிரண்ஸ் இப்ப ஜெபிப்போமா.

## ஜெபம்

**அன்புள்ள இயேசப்பா தப்பு செய்யாம என்னை பாதுகாத்துக் கொள்ளுங்க, எப்போதாவது தவறும் போது மறைக்காம உம்மிடம் சொல்லி மன்னிப்புக் கேட்க உதவி செய்யுங்க. இயேசுவின் நாமத்தில் பிதாவே, ஆமென்.**

## மனப்பாட வசனம்

**தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான். நீதி 28:13.**





# ஜீவனுள்ள தேவனாலே எல்லாம் கூடும்



நான் பேங்க் வேலைக்காக பரிட்சை எழுதலாம் என்று 2 ஆண்டுகளாக படித்து பரிட்சை எழுதினேன். ஆனால் என்னால் வெற்றி பெற முடியவில்லை. மிகவும் சோர்ந்து போய் விட்டேன். கர்த்தரிடத்தில் கேட்டு படிக்காமல் என் சுய இஷ்டப்படி முடிவு எடுத்ததால் தான் எனக்கு வெற்றி கிடைக்கவில்லை என்று புலம்பினேன். 6 மாதங்கள் பயிற்சி வகுப்பிற்கும் சென்று படித்துவிட்டு நின்று விட்டேன், தொடர்ந்து நான் படிக்க முடியாதபடிக்கு என் தனிப்பட்ட வாழ்க்கையிலும், எங்கள் குடும்பத்திலும் பல பிரச்சனைகள், போராட்டங்கள், அவமானங்கள் சூழ்ந்தது. நான் வீட்டில் இருக்க முடியாத நிலையும் வந்தது. இந்த சூழ்நிலையிலும் கடந்த வருடம் நான் பேங்க் வேலைக்காக பரிட்சை எழுதினேன், முதல் பரிட்சையில் வெற்றி பெற்றேன். மெயின் தேர்விற்காக நான் படிக்க முடியவில்லை, பரிட்சைக்கு முந்தின வாரம் முழுவதும் ஒன்றுமே படிக்க முடியாத அளவுக்கு பிரச்சனைகள், நானும் படிக்கவே இல்லை. அடுத்த வாரம் பரிட்சைக்குச் சென்று எழுதிவிட்டு வந்தேன் ஆனால் எனக்கு ஒரு திருப்தி இருந்தது. அந்த பரிட்சைக்கான ரிசல்ட் ஜனவரி 1-ஆம் தேதி என்று அறிவித்திருந்தார்கள். 1-ஆம் தேதி அன்று, ஒரு வாக்குத்தத்தத்தை தேவன் எனக்கு தந்தார். சகரியா 9:12 நம்பிக்கையுடைய சிறைகளே அரணுக்கு திரும்புங்கள், இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன் என்று தேவனுடைய வார்த்தை எனக்கு கிடைத்தது அந்த வசனத்தையைச் சொல்லி ஜெபித்துக் கொண்டே இருந்தேன். அன்று வந்த ரிசல்டில் எனக்கு தேவன் வெற்றியை தந்து அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த கிருபை செய்தார் அவருக்கே கோடான கோடி ஸ்தோத்திரம்.

சகோதரர். கிறிஸ்டோபர் – (வண்ணம்பட்டி)



எனக்கு குழந்தை இல்லாத நாட்களில் ஸ்கேன் எடுத்துப் பார்த்த போது என் கர்ப்பபை சின்னதாகவும், முழுவதும் கட்டியாக இருக்கிறது என்று சொல்லிவிட்டார்கள். கட்டியை ஆப்ரேஷன் செய்து எடுத்தாலும் குழந்தை இருக்காது என்றார்கள். ஆனால் கட்டியை ஆப்லேஷன் செய்து எடுத்த 5-ஆவது மாதத்திலேயே நான் குழந்தை பாக்கியத்தை அடைய தேவன் கிருபை செய்தார். பின்பு ஸ்கேன் பண்ணிப்பார்த்தால் குழந்தைக்கு எலும்புகள் வளர்ச்சி குறைவாக இருக்கிறது என்றார்கள், இந்த குழந்தை பிறந்தாலும் குறைபாடுள்ள குழந்தையாகவே இருக்கும் என்று சொல்லி கலைக்கச் சொன்னார்கள். எனக்கும் இரத்த கசிவும் இருந்து கொண்டே இருந்தது. ஆனால் நான் வானத்தின் வாசல் ஜெபத்திற்கு வந்து ஜெபித்தேன். இது தேவன் தந்த குழந்தை நிச்சயமாக எந்த குறையும் இருக்காது என்று விசுவாசித்தேன். பிரசவத்திற்காக மருத்துவமனைக்குச் சென்றேன் எனக்கு கொரோனா என்று சொல்லிவிட்டார்கள் அதிலும் என் தேவன் என்னையும் குழந்தையையும் காப்பாற்றினார். குழந்தை பிறந்த பிறகு அதற்கு மஞ்சள் காமாலை என்று சொன்னார்க்ள தேவன் அதிலும் என் குழந்தையை காப்பாற்றினார். அந்த ஜீவனுள்ள தேவனுக்கு மகிமை உண்டாவதாக.

– சகோதரி. புனிதா (திண்டுக்கல்)

Jesus Lives MINISTRIES

# School of EVANGELISM

# சுவிசேஷ பயிற்சி பள்ளி

## பயிற்சியைப்பற்றி

- கிறிஸ்துவை அறிந்த அனைவரும் செய்ய வேண்டிய தலையாய கடமை சுவிசேஷம் அறிவிப்பது ஆகும்.
- பயிற்சியின் 6 நாட்களும் தலைசிறந்த சுவிசேஷகர்கள் மற்றும் போதகர்களால் உங்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
- தங்குவதற்கு இடம், தினமும் மூன்று வேளை உணவு மற்றும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- பயிற்சிக்கான உபகரணங்கள் மற்றும் பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- பெண்களுக்கு தனியாக தங்குமிடம் உண்டு.



**அக்டோபர்**

# 22-27

JOIN NOW »

## நீங்கள் பதிவு செய்ய வேண்டிய வழிமுறைகள்

WEBSITE - soe.jesuslives.in

E-MAIL - soe@jesuslives.in

PHONE - +91 9498000449

# இயேசு வாழ்கிறார் ஊழியத்தோடு இணைந்து சுவிசேஷ ஒளியை பரவ செய்யுங்கள்

தேவன், தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் தமது ஊழியத்தில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புகிறார்.அவரது நோக்கத்தை நிறைவேற்ற அவர் தமது பிள்ளைகளை பயன்படுத்துகிறார். நாம் வெறும் பார்வையாளராயிருப்பதை அவர் விரும்பாமல், அவரது ஊழியத்தின் பங்காளராக மாறுவதையே அவர் விரும்புகிறார்! நாம் கரையில் நிற்பதை விரும்பாமல் களத்தில் இறங்குவதையே அவர் விரும்புகிறார். அறிவிக்கப்படாத மக்களைச் சந்தித்து, சுவிசேஷத்தை கூறி, உலகை சுவிசேஷமயமாக்குகிற அந்த மகிமையான ஊழியத்தில் தமது பிள்ளைகள் ஒவ்வொருவரும் ஈடுபட வேண்டும் என அவர் விரும்புகிறார்!

விளையச் செய்கிறவர் தேவனாக இருந்தாலும், விதைக்கிற வேலையையும், நீர்ப்பாய்ச்சுகிற வேலையையும் அவர் நமது கரங்களில் ஒப்படைத்திருக்கிறார்(1கொரிந்தியர்3:7). இக்கடைசி காலத்தில், தமது சித்தத்தை நிறைவேற்றுகிற பணியில் ஈடுபடவேண்டுமென கர்த்தர் விரும்புகிறார்.

வாருங்கள்! இக்கடைசி கால எழுப்புதல் சுவிசேஷ பணியில் இணைந்து அவரது நோக்கத்தை நிறைவேற்றுகிற ஊழியத்தின் பங்காளர்களாக மாறுவோமாக!

## 1) BANK TRANSFER

| | | |
|---|---|---|
| A/C NAME | : | JESUS LIVES TRUST |
| BRANCH | : | KOCHADAI MADURAI |
| BANK NAME | : | UNION BANK OF INDIA |
| A/C.NO | : | 493902010001022 |
| IFSC CODE | : | UBIN0549398 |

| | | |
|---|---|---|
| A/C NAME | : | L.VINCENT RAJ |
| BRANCH | : | MADURAI |
| BANK NAME | : | AXIS BANK |
| A/C.NO | : | 109010100247030 |
| IFSC CODE | : | UTIB0001765 |

**2) இணையதளம்(WEBSITE)**
WWW.JESUSLIVES.IN

**3) காசோலை(CHEQUE)**
JESUS LIVES TRUST OR L.VINCENT RAJ

**4) GOOGLE PAY** : GPAY(GOOGLE PAY)TO , 944 300 9333 ,7598359316

**5) மணியார்டர்(E.M.O)** : இயேசு வாழ்கிறார் ஊழியங்கள் 54 ஏ.ஐ.பி.இ.ஏ நகர், ஏ - காலனி பரவை ,மதுரை - 625 402

நமது இயேசு வாழ்கிறார் ஊழியத்திற்கென்று வங்கிக் கணக்கு மூலமாகவோ, இணையதளம் மூலமாகவோ, அல்லது GOOGLE PAY மூலமாகவோ அனுப்பலாம். காணிக்கை அனுப்பியபின் அதைக் குறித்த விபரத்தை 944 28 00 449 என்கிற இந்த எண்ணில் தொடர்பு கொண்டோ, அல்லது இதே எண்ணிற்கு WHATSAPP மூலமாகவோ, accounts@jesuslives.in மூலமாகவோ எங்களுக்கு தெரியப்படுத்தவும்.

# நடப்பு ★★★★★★ செய்திகள்

## மன அழுத்தம்: டிஸ்தைமியா என்றால் என்ன?

நமக்குத் தெரிந்த, பொதுவான மனச்சோர்வின் போது ஏற்படக்கூடிய தூக்கமின்மை, தலைவலி, சோகம், உணவு உண்ண பிடிக்காதது, தன்னை அழகுபடுத்திக் கொள்ளவோ, நண்பர்களோடு நேரம் செலவிட விரும்பாதது ஆகிய அறிகுறிகள் தென்படும். இவையே டிஸ்தைமியாவில் நீண்ட காலகட்டத்திற்கு இருக்கும். ஆனால் மெல்லிய அளவில் தொடர்ச்சியாக இருந்து கொண்டே இருக்கும். 'டிஸ்தைமியா இருப்பவர்கள் யாரோடும் பெரிதாக ஒட்டவே மாட்டார்கள். எந்தச் சூழ்நிலையிலும் அவர்களிடம் மகிழ்ச்சியான மனநிலையே இருக்காது. அவர்களிடம் எப்போதும் ஒரு சோகம் இழையோடிக் கொண்டேயிருக்கும். சரியாகத் தூங்க மாட்டார்கள்,' என்கிறார் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனையின் மனநல மருத்துவர் சதீஷ். கொண்டாட்ட நிகழ்வுகள், நண்பர்களுடனான சந்திப்பு, குடும்ப நிகழ்ச்சி என்று எதிலுமே பெரிய நாட்டமோ ஈடுபாடோ டிஸ்தைமியா உள்ளவர்களுக்கு இருக்காது. 'இதனால் பாதிக்கப்பட்டவர்கள், மகிழ்ச்சியான எதையும் அனுபவிக்க முடியாமல், யாருடனும் நட்பு வைத்துக்கொள்ள முடியாமல், தனிமையில் சோகமாகவே இருப்பார்கள். எதையும் முழு ஈடுபாட்டுடன் செய்ய முடியாமல் போவதால், இவர்கள் செய்யும் அனைத்தும் முயற்சியாகவே இருக்கும், வெற்றியடைவது மிகவும் கடினம். பிறகு இதனாலேயே வாழ்வில் எதுவும் வெற்றிகரமாக நடக்கவில்லையே என்று மனச்சோர்வு அதிகரிக்கும்,' இந்த டிஸ்தைமியா பிரச்சனை ஒருவருக்கு ஆண்டுக்கணக்கில் இருக்கக்கூடும். ஆனால், அதை நண்பர்களோ உடன் பணியாற்றுபவர்களோ கவனிக்காமலே கூட இருக்கலாம். நீண்ட காலத்திற்கு டிஸ்தைமியா இருப்பவர்கள் சோகமாகவே இருப்பதால், அவர்களுடைய சுபாவமே அப்படித்தான் என்று கூட சுற்றத்தினர் கருதுவதுண்டு. 'ரத்த அழுத்தம், நீரிழிவு ஆகியவற்றை அளவீடுகளின் மூலம் நாம் கண்டறிய முடியும். ஆனால், இதை மனநல பரிசோதனையின் மூலம் மட்டுமே உறுதி செய்ய முடியும். ரத்த அழுத்தம், நீரிழிவு போன்று இதற்கெனத் தனியாக எந்தவித பரிசோதனை முறையும் இல்லை. ஒருவருக்கு டிஸ்தைமியா இருப்பதைப் போல் தெரிந்தால், மனநல மருத்துவர் அவரைப் பரிசோதித்து, அவருடைய கடந்த கால உரையாடல்கள், நடவடிக்கைகள் குறித்து குடும்பத்தினரிடம் விசாரிப்பதன் மூலம் அதை உறுதி செய்வார். மனச்சோர்வு கடுமையாக இருந்தால், அது வெளிப்படையாகத் தெரிந்துவிடும். ஆனால், இது மிகவும் மெல்லிய அளவில் இருப்பதால் இதுவொரு பிரச்சனை என்பதை குடும்பத்தினர் கண்டறிவது மிகவும் கடினம், பதின்பருவத்தின் பிற்பகுதியில் இது பெரும்பாலும் தொடங்குவதற்கான வாய்ப்புகள் அதிகம். அப்போது தொடங்கி வாழ்வில் எப்போது வேண்டுமானாலும் வரலாம். தரவுகளை பார்க்கும்போது, இதனால் ஆண்களைவிட பெண்கள் சற்று அதிகம் பாதிக்கப்படுவதாகத் தெரிகிறது.

**ஜெபம்**

இப்படிப்பட்ட மனஅழுத்தத்தினால், மனசோர்வினால் பாதிக்கப்பட்டிருக்கிற நம் மக்களின் விடுதலைக்காகவும், இரட்சிப்பிற்காகவும் ஜெபிக்க வேண்டியது நமது கடமையாகும், நாம் அவர்களுக்காக தொடர்ந்து ஜெபிப்போம்.

Owned & Published by: Bro.L.VincentRaj , & Editor Bro.L.VincentRaj
Published by Jesus Lives Trust, Yesuvai Thinam Parkiren
54,A.I.B.E.A-Nagar,Paravai,Madurai - 625402
Printed by: C.CHELLACHAMY,PRISM PRINTERS,Madurai


கோவையில்
உபவாச ஜெப
முகாம்
அக்டோபர்
3,4
@9.00Am - 5.00Pm
இடம்
TELC ஆலய சபா மண்டபம்
மணி கூண்டு அருகில், டவுன்ஹால்
கோவை-1
EVG.KALAVINCENTRAJ
EVG.L.VINCENTRAJ
Evg.T. STEPHEN


செம்பட்டியில்
உபவாச
ஜெபம்
இடம்
வானத்தின் வாசல்,
எழுப்புதல் ஜெப மையம்,
செம்பட்டி, திண்டுக்கல்
அக்டோபர்
8
@10:00AM
நேரடி கூடுகை
PHYSICAL GATHERING
தொடர்புக்கு
94428 00449
94428 00447
Sis. Kala Vincentraj
Bro. L. Vincentraj

Date of Publication on 20th (Every Month)
RNI NO .TNTAM/2000/00621 Postal Registration No. TN/MA/42/2021-2023
WPP Registration No. TN/WPP-40/SR/2021-2023
Date of Posting 27th (Every Month) Posted at Madurai R.M.S




TO

If Undelivered (Please Return To)
YESUVAI THINAM PARKIREN
54,A.I.B.E.A Nagar,Parvai
Madurai-625402
South India.